

FREE EDITION

December - 2016

# ஜோதி

# Jothi

Spiritual Newsletter

ஜோதி 10 : சுடர் 10 - 118

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

மேல்மருவத்தூர்

ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்

**சக்தி மாலை**

**இருமுடி விழா**

**இருமுடி செலுத்துதல்**

14.12.2016 முதல்

08.02.2017 வரை

**தைப்பூச ஜோதி பெருவிழா**

ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் அவர்கள் தம் திருக்கரங்களினால் ஏற்றி வைக்கவிருக்கும் ஏக ஜோதியான

**தைப்பூச ஜோதி**

**09.02.2017**

# சந்தேகமும் தெளிவும்
# செய்வினை – தொண்டு

இறையருள் கிட்டிட குருவருள் தேவை. குருவை நாம் எப்படித் தெரிந்து கொள்வது? அவர் காட்டும் வழி கண்டு நின்று உயர்வது எப்படி? அது எக்காலம்? இவ்வாறெல்லாம் நம் மனதில் கேள்விகள் எழுவதும் தெளிவு பெற நினைப்பதும், அவ்வழி முயல்வதுமே நம்மை உய்விக்க இறையருள் கூடிவிட்டது என்று புரிந்து கொள்ளலாம்.

**சக்தி கொண்டா ரெட்டியார்**
சரவம்பாக்கம்

இறைவியாகிய அன்னை ஆதிபராசக்தி நம்மை நல்வழிப்படுத்திட தானே அடிகளார் என்ற மானுட சட்டை தாங்கிக் குருவாக அவதரித்திருக்கிறாள். உலகியலில் முன்வினைப் பயனுக்கேற்ற வகையில் உழன்று ஆழ்ந்து அயர்ந்து ஆடிக்காற்றில் அலையும் பஞ்சாய் ஓடி இளைத்த நம்மை அன்னையே குருவாக எளிவந்த கோலத்தில் நாமும் பிறந்து வாழ்ந்து உய்யும் பேறு பெற்றிருக்கிறோம். அவளின் கருணைக்கு நாம் ஆட்பட்டிருக்கிறோம் என்பதை எளிதாக உணரலாம். உயிர்களாகிய நாம் நம் வினையொழித்து முத்தி பெற வழிவகுத்துக் கொடுத்திருக்கிற அன்னையைப் போற்றுதும்.

அந்த வழிதான் என்ன? அது தொண்டு செய்தல், தொண்டனாயிருத்தல், உண்மைத் தொண்டனாயிருத்தல் என்பது உயர்ந்த நிலை. மானிடனாயிருந்தால் மட்டுமே தொண்டு செய்ய இயலும். முக்திபேறு மானிடர்க்கு மட்டுமே உண்டு தேவர்கட்கு இல்லையென்பது சித்தாந்திகளின் கருத்து.
எனவே நாம் மானிடராய்ப் பிறந்ததே உயரிய நிலை, பக்தியோடு இருத்தல் அடுத்த நிலை, தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றது அதற்கும் மேல் நிலை. 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிது' என ஔவைப்பாட்டி சிறப்பித்துக் கூறி உள்ளார்.

பிறவிகள் பல கடந்து மானிடப் பிறவியை எய்தி உள்ளோம். இதை மாணிக்கவாசகப் பெருமான் உயிர்கள் கடந்து வந்த நிலையை

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல் விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பு ஆகி
கல்லாய் மனிதராய்' எனவும்

'எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' எனவும் விளக்குகிறார். இவ்வாறு நமக்கு வாய்த்த மானிடப் பிறவியில் அம்மா நம்மையும் பொருட்டாக ஏற்றுத் தொண்டு செய்' என அருளி நாம் உய்யும் வழியைக் காட்டி உணர்த்துகிறாள்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**"ஆன்மிகநெறியில் ஈடுபடாதவர்களையும் ஆன்மிகத்தில் ஈடுபடுத்தினால் அவர்கட்கும் நிம்மதி கிடைக்கும், உங்களுக்கும் நிம்மதி கிடைக்கும்."**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**

## செய்திச்சுடரில்...

சந்தேகமும் தெளிவும் செய்வினை – தொண்டு
Page: 1 – 2

என்னை அடைய எளிய வழி
Page: 3 - 4

UPCOMING EVENTS

Melbourne: 4, 10, 11
Sydney: 3, 5

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 11

அருள்வாக்கும் அனுபவங்களும்...
பக்கம்: 7 - 10

Divine Miracles
Page: 12

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 15

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16

# சந்தேகமும் தெளிவும்..

(முன்பக்க தொடர்ச்சி)

தொண்டு என்பது சுயநலமில்லாமல் விருப்பு வெறுப்பு இன்றிப் பிறர்க்குத் தீங்கிழைக்காமல் பலனை எதிர்பாராமல் செய்யும்போது முன்வினைகள் கழன்று கழிந்து விடும்.

இப்பிறவியில் செய்யும் வினைகளும் நம்மைப் பற்றாது. நம் வினைக் கணக்கைத் தீர்க்கவே அன்னை ஆதிபராசக்தி மேல்மருவத்தூரில் பங்காரு அடிகளாராக நமக்காக இரங்கிவந்து குருவாகக் கருணை வடிவு கொண்டு தொண்டு செய் என அருளாணையிடுகிறாள். 'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்பதைப் போல இவ்வாய்ப்பை நாம் இழக்கலாமோ? பிறவியிலே கண் பார்வையில்லாத ஒருவனுக்குக் கண்பார்வை கிடைக்கப் பெற்று மீண்டும் அவன் பார்வை இழந்து விடுவானேயாகில் அவன் துன்பம் எத்தகையதோ அதேபோன்றது தான் தொண்டு செய்யும் வாய்ப்பும் பெற்றும் அதைத் தவற விடுவது ஆகும்.

'கைவினை செய்யின் செய்வினை இல்லை' என்பது வழக்கு. கைவினையென்பது தொண்டேயாகும். செய்வினை என்பது முன் செய்தவினை. இப்போது செய்கின்ற வினை அடுத்து நாம் செய்ய இருக்கின்ற வினை ஆகிய மூன்றும் சேர்ந்து நாம் முற்பிறவிகளில் எப்போதோ செய்த வினைதான் இப்பிறவியில் நமக்குச் செய்வினையாக வந்து துன்புறுத்துகிறது என்பது தெளிவு. அதிலிருந்து விடுபடவே தொண்டு செய்ய வேண்டும். தொண்டு செய்து வினைக்கணக்கை எளிதில் தீர்த்து விடலாம் என்பது உறுதி. இதனையே திருஞானசம்பந்தப் பெருமான்

'அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம் பிரான் கழல் போற்றதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்

என உறுதிபடச் சொல்லுகிறார். எனவே தொண்டு செய்வோம். அதைத் தொடர்ந்து செய்வோம். நம்மை அறியாமலேயே நாம் செய்யும் தொண்டுக்குக்கூட அருள் உண்டு. திருமறைக்காடு எனும் வேதாரண்யத்தில் ஆலய விளக்கில் உள்ள எண்ணெயைக் குடிக்க வந்த எலி தன்னையறியாமலேயே தன் மூக்கினால் விளக்குத் திரியைத் தூண்டி விட்டுவிட விளக்கு நன்கு சுடர்விட்டு எரிந்தது. இதன் காரணமாக அந்த எலி அடுத்தப் பிறவியில் மூவுலகையும் ஆளும் மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. இது உழவாரத் தொண்டு செய்து உய்ந்த அப்பரடிகள் எனப் போற்றப்படுகின்ற திருநாவுக்கரசர் பாடலால் அறியலாம்.

'நீ செய்கின்ற சிறிய தொண்டுக்கும் பெரும்பலன் உண்டு. சிறுதுளி பெருவெள்ளம் ஆகிறது. அந்தப் பெருவெள்ளம் இறுதியில் கடலில் சங்கமம் ஆகிறது. கடலில் கலந்த நீரைப் பிரிக்க முடியாது. அதைப்போல நீ செய்த தொண்டின் பலனையும் மற்றவர்கள் கவர்ந்து கொள்ள முடியாது. அந்தப் பலன் உன்னையே அடையும்.' இது நம் அம்மாவின் அருள்வாக்கு ஆகும். (சக்தி ஒளி –ஐப்பசித்திங்கள் விரோதி ஆண்டு, அக்.2009)

கருணையே உருவான நம் அன்னை நாம் செய்கின்ற ஒவ்வொரு தொண்டுக்கும் பலமடங்கு பலன் தருவாள். நமக்கு அவள் கடன்படமாட்டாள். நாம்தான் அவளுக்குக் கடன்பட்டவர்கள் என்பதை உணர்ந்து தொண்டாற்றுவோம். பிறரையும் தொண்டாற்றச் செய்வோம், உயர்வோம், உய்வோம், வினைக் கணக்கை முடிப்போம்.

ஓம் சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – December 2016



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 02.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.12.2016 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 16.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## என்னை அடைய எளிய வழி

**- அன்னையின் அருள்வாக்கு**

“தியானம் செய்வதும், தவம் செய்வதும் ஒரு வகையான வழிதான். ஆனால், தியானத்தால் மட்டும் என்னை அடைந்துவிட முடியும் என்று மனப்பால் குடிக்காதே!
தவம் செய்யத் தொடங்கித் தங்கள் உடம்பின் மேல் புற்று முளைக்கும் நிலையில் உள்ளவர்களும், புற்று மண்டி அதன்மேல் மரம் முளைத்த நிலையில் உள்ளவர்களும் இன்றும் இருக்கிறார்கள். என்றாலும் என்ன? அவர்கள் என்னைக் காண முடிந்ததா? இல்லை!

ஏன் தெரியுமா? அவர்கள் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டாலும் என்னை வந்து அடைய முடியாது. உன் முயற்சியால் மட்டும் என்னை அடைந்துவிட முடியாது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். உன் முயற்சியைக் கண்டு இரக்கம் கொண்டு நான் உன்னிடத்தில் வரவேண்டுமே தவிர நீ என்னிடம் வருவது இயலாத காரியம்! இதனால் நீ முயற்சி செய்ய வேண்டாம் என்பது கருத்தில்லை. ஆனால் பிற உலகியல் விஷயங்களில் உன் முயற்சி எவ்வளவு பெரிதாக இருப்பினும் என் அருள் இருந்தாலொழிய அந்த முயற்சி எவ்விதப் பயனையும் அளிக்காது. செபம், தவம் என்ற இரண்டும் இல்லாமலே என் அருளைப் பெற முடியும் என்பதையும் நீ அறிய வேண்டும்.

முழுவதுமாக என்னையே சரணம் அடைந்துவிடு! அதன் பிறகு நானாக உனக்கு என்ன பணி இடுகிறேனோ, அதனை ஏன்? என்ன? எதற்கு? என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடாமல் முழு மனத்தோடு செய்ய முற்படு! அப்பொழுது என்னை எளிதாக அடைய முடியும். தொண்டு நெறி என்ற இந்த நெறியில் இருக்கும் சௌகரியத்தைத் தெரிந்து கொள்.

நான் உன்னிடத்தில் வரவேண்டும் என்று கருதி நீ செய்யும் செப, தவங்களால் என்னை வரவழைக்க முடியாது என்று கூறினேன். ஆனால் நானாக உன்னிடம் வரும் அரிய சந்தர்ப்பம் ஒன்று உண்டு. அது எப்பொழுது தெரியுமா? நானே உன்னிடம் வந்து ஒரு பணியைச் செய்யுமாறு ஏவுகிறேன். அந்தப் பணி சிறியதாகவோ, பெரியதாகவோ, கடினமானதாகவோ, எளிமையானதாகவோ இருக்கலாம். ஆனால் ஒன்றை மறந்து விடாதே!

நான் எங்கோ இருந்துகொண்டு உன்னை ஏவவில்லை. உனக்கு அருகில் வந்துதான் இந்தப் பணியைச் செய் என்று ஏவுகிறேன். நான் உனக்கு அருகில் வரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்! எவ்வாறு என்று கேட்கிறாயா?

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – December 2016

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.12.2016 | Friday | கார்த்திகை | 17 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 04.12.2016 | Sunday | கார்த்திகை | 19 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 09.12.2016 | Friday | கார்த்திகை | 24 | Joint Prayer – கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.12.2016 | Sunday | கார்த்திகை | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 16.12.2016 | Friday | மார்கழி | 01 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.12.2016 | Sunday | மார்கழி | 03 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 23.12.2016 | Friday | மார்கழி | 08 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.12.2016 | Sunday | மார்கழி | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 30.12.2016 | Friday | மார்கழி | 15 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

**28.12.2016 – வியாழன் - அமாவாசை, 13.12.2016 – செவ்வாய் - பௌர்ணமி**

## என்னை அடைய எளிய வழி. .

நான் இட்ட பணியை உடனே நீ செய்து முடித்தால் என்னைப் பற்றிக்கொள்ள முடியும். நானே உன்னிடம் வந்துதான் அந்தப் பணியை உனக்கு இடுகிறேன். என்னிடம் நீ வரவேண்டும் என்ற உன் விருப்பத்திற்கு இணங்காத நான் இப்பொழுது நானாகவே உன்னிடம் வருகிறேன் அல்லவா? இதைவிட அரிய வாய்ப்பு உன் வாழ்க்கையில் வேறு எப்பொழுது கிடைக்கப் போகிறது?

எந்தப் பொருளை எப்படியாவது நெருங்க வேண்டும் என்று நீ நினைத்துச் செபம், தவம் முதலியவற்றை மேற்கொள்கின்றாயோ, அந்தப் பொருளே இப்பொழுது உன்னை நாடி, உன் அருகில் வந்து ஒரு பணியை உனக்கு இடுகிறது என்றால் அதைவிட உனக்குக் கிடைக்கும் வாய்ப்பு வேறு எதுவாக இருக்க முடியும்?

எந்த ஒன்றை நாடி நீ செபம், தவம், தியானம் முதலியவற்றை மேற்கொள்கின்றாயோ, அந்த ஒன்று உன்னிடமே வந்து ஒன்றைச் செய்யுமாறு ஏவுகிறது என்றால் இதைவிடப் பெரிய அதிர்ஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்?

நீ அந்தப் பணியை முழுமனத்துடன் - முழு முயற்சியுடன் செய்து முடிப்பதுதான் என்னை உன்னை விட்டுப் போகவிடாமல் பற்றி இருத்திக்கொள்ள எளிய வழியாகும்.

தொண்டு செய்வதன் மூலம் நீ என்னை எளிதாகப் பற்றிக் கொள்ள முடியும். எந்தப் பணியை நான் இட்டாலும் அதில் உயர்வு, தாழ்வு என்று கருதாமல் லாப நஷ்டக் கணக்குப் போடாமல் செய்து முடிப்பதே என்னை அடையும் வழியாகும்.


தவம் மேற்கொண்டு புற்றாகவும், மரமாகவும் நிற்கின்றவர்கள் என்னை இன்னும் காணவில்லை. ஆனால், என் பணியைத் தலைமேற் கொண்டு செய்யும் உன் எதிரில் நான் நிற்கிறேன். இந்த எளிய வழியை நீ விட்டுவிடாதே!

ஓம் சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – December 2016



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.12.2016 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 16.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## "வேள்விப்பூசை, வழிபாடு"

### அன்னையின் அருள்வாக்கு

**பஞ்சபூதங்கள்**

"பஞ்சபூதங்களைப் போற்றி வழிபடாவிட்டால் எல்லாம் பஞ்சு பஞ்சாக மாறிவிடும்."
"இயற்கையை அழியாமல் காக்கவேண்டும். அதற்காகவே பஞ்சபூத வழிபாடு! அதுதான் இங்கே (மேல்மருவத்தூர்) நடக்கிறது".

**கலசவிளக்கு வேள்விப்பூசைகள்**

"உங்களிடம் உள்ள அறியாமையை நீக்கி, அறிவை வளர்ப்பதற்காகவே கலச விளக்கு வேள்விப்பூசை. யாகம் யோகத்திற்கு உதவும். ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு பயன்படும். உயர்வு தாழ்வுகள் நீங்கவும் பயன்படும்.

இயற்கையை ஒட்டி நீங்கள் வாழ்வதற்கு வேலிபோலப் பாதுகாக்கும்.
உலகத்தில் உள்ள சலசலப்புகள் நீங்கித் தர்மங்கள் செழிக்க வேண்டுமானால் கலச வேள்விப்பூசை அவசியம்.
மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என்று பாராமல் எல்லோரும் பூசை செய்ய வேண்டும்.
எந்த வேள்விக்குப் போனாலும் வந்தாலும் பெண்கள் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பருத்தி நூல் புடவைதான் உடுத்த வேண்டும். ஜாக்கிரதையுடன் யாக சாலையில் எண்ணெய் ஊற்ற வேண்டும்".

**வழிபாடு – அன்றும், இன்றும்**

"மனிதகுலம் ஒரு காலத்தில் பாம்பு, சூரியன், சந்திரன் ஆகிய இயற்கையை வழிபடத் தொடங்கியது. அதன்பிறகு ஒரு சித்தனை உருவம் வைத்து வழிபட்டது. பிறகு சிலை வடித்து, ஒரு தெய்வம் என்று சொல்லி வழிபட்டது. பிறகு யேசு என்றது, அல்லா என்றது.

வழிபாடு என்பது ஒழுங்காக அமையும்போது மனித குலத்திற்கு நன்மை உண்டாகும். அது வழிதவறிப்போகும்போது அழிவுதான் உண்டாகும்.

மிருகங்களிடம் ஒரு குணம் மட்டுமே உண்டு. ஆனால் மனிதனிடம் உள்ள ஐம்புலன்களும் ஐந்து மிருகங்கட்குச் சமம். இவற்றைக் கட்டுப்படுத்தி முன்னேறுவதற்காகவே வழிபாடு!

கலசவிளக்கு யாக பூசைகளெல்லாம் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன்.

செங்கல் கொடு! சிமெண்ட கொடு எனச் சொல்லி உங்களைத் தருமம் செய்யச் சொல்லி உங்களுக்கு அதனால் பலன் தருகிறேன். பலன் தருவதோடு நில்லாமல் உங்கள் ஆன்மாவைச் சுத்தம் செய்துகொண்டும் வருகிறேன். மேலும் மேலும் அழுக்குகளை ஏற்றிக் கொள்ளாமல் நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்."

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## ஆத்ம சக்தி எரியத் தொடங்கும்

“ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை ஒன்றுபடுத்தி ஆசாபாசங்களை அடக்கி அம்மாவை நினைத்துத் தியானமம் செய்! ஆத்ம சக்தி எரியத் தொடங்கும்! இன்று நெருப்பில் எதை எதையோ பற்ற வைக்கிறார்கள். ஆத்ம சக்தியைப் பற்றி எரிய வைக்க மாட்டேன் என்கிறார்கள். அறிய வைப்பது தான் ஆன்மா! அந்த ஆன்ம சக்தியைத் தியானத்தால் பற்ற வைக்க வேண்டும்.”

## அம்மாவிடம் வந்த பிறகும்...

“துணி துவைத்தால் உங்கள் துணியும் தேயும். துவைக்கிற கல்லும் தேயும். ஆனால் நம் அழுக்கு தேய்வதில்லை.

நிலாவைப் பிடித்துக் கொடுப்பது போல பாசாங்கு காட்டித்தான் அம்மா உங்கட்குப் பாசம் காட்டி உணவூட்டுகிறது. ஆனாலும் அம்மாவை விட்டு விட்டுச் சினிமாவுக்குக் கியூவில் நிற்கிறார்கள். பச்சைக் குழந்தையை விட்டு விட்டுச் சினிமா பார்க்கப் போகிறார்கள்.

ஒவ்வொருவர் பாவம் அவரவரை அடிக்கிறது. அம்மாவின் நிழலில் வந்த பிறகும் புழுக்கம் போகவில்லை.”

## உடல் உழைப்பு குறைந்துவிட்டது

“எப்படி ஜனத்தொகையைக் குறைப்பது? நோயில்லாமல் வாழ்வது? என்றெல்லாமல் எழுதுகிறார்கள் பேசுகிறார்கள்

அன்றைக்கு நல்ல உடல் உழைப்பு இருந்தது. நீராகாரம், களி, கூழ் என்று சாப்பிட்டார்கள்.

இன்றைக்கு உடல் உழைப்பை மறக்க போதையை நாடுகிறார்கள். படித்தவர்கள் இளைஞர்கள் போதையை நாடுகிறார்கள்

தியானமே அந்த போதையைத் தரும். தியானம் என்று சொல்லிக்கொண்டு உடலுழைப்பைத் தள்ளக் கூடாது.”

## பெண்களும் - ஆன்மிகமும்

“ஆன்மிகத்தில் பெண்கள் ஈடுபட்டால் நல்லது நடக்கும். ஆன்மிகத்தை விட்டு விட்டு இப்போது பெண்களும் குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். குடி நம்மைக் குடிக்க ஆரம்பிக்கும். அது வீட்டுச் சண்டையில் ஆரம்பித்து விஷம் குடிப்பதில் முடிகிறது. ஆன்மிக ஈடுபாடு தற்கொலை எண்ணத்தை நீக்கும்!”

## ஆன்மிகத்தை–ஆன்மாவை–அன்பை–விலை கொடுத்து வாங்க முடியாது

“மன்றம் வந்து பத்து நிமிடம் தியானம் இருந்து பார்
அவரவர் வயதுக்குத் தக்கபடி ஆன்மிகப் பணி செய்து பார்!”

## கொடுப்பதிலேயே சந்தோஷம் இருக்கிறது!

“எல்லோருக்கும் நல்லதே செய்ய வேண்டும்!
ஒரு நாற்றுக்குப் பதிலாகப் பத்து நாற்று நட்டுப் பார்! ஒரு லட்டு கிடைத்தால் பத்து பேர்க்குக் கொடுத்துச் சாப்பிட்டுப் பார்! அதில்தான் சந்தோஷம் இருக்கிறது.”

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நான் சிவனுக்கே தாய்! நான் ஆதிபராசக்தி

### திருமதி தைலம்பாள்

ஈரோடு அருகே உள்ள பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்தவர் திருமதி தைலாம்பாள். பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். அவர் கணவர் பஞ்சாயத்து யூனியனில் ஜீப் டிரைவராகப் பணியாற்றிக்கொண்டு வந்தார். அவர் கணவருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமற்போகும்.

ஒருமுறை சேலத்தில் நடைபெற்ற கலெக்டர் மீட்டிங்கிற்கு சங்ககிரி கோட்டாட்சி அலுவலர் அவர்களைக் கொண்டு சென்று விடவேண்டியிருந்தது. அவ்வாறு சென்றபோது திடீரென்று நெஞ்சுவலி வந்துவிட்டது. உடன் வந்த அதிகாரிகள் அவரை சேலம் நகர மருத்துவமனையில் சேர்ந்தார்கள்.

### சேலம் மருத்துவமனையில்

சேலம் மருத்துவமனையில் தைலாம்பாள் கணவரைப் பரிசோதனை செய்த டாக்டர்கள் இனி அவர் பிழைக்கமாட்டார். எல்லாவித சிகிச்சையும் செய்து பார்த்துவிட்டோம் என்று கூறிவிட்டார்கள். உடனே, தைலாம்பாளுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அவர் பதறியபடி வந்து சேர்ந்தார்.

“உங்கள் கணவர் இருதய நோயாளியாக இருக்கிறார். ஏற்கனவே இரண்டு முறை அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சொல்கிறீர்கள். இது மூன்றாவது முறை! உயிர் தப்புவது கடினம்! இவரை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்” என்றார்கள் டாக்டர்கள்.

### ஈரோடு மருத்துவமனையில்...

தன் குலதெய்வமான பத்ரகாளியம்மன் மேல் பாரத்தைப்போட்டுவிட்டு, ஒரு டாக்சியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தங்களுக்குப் பழக்கமான ஈரோடு டாக்டர் திரு.சத்தியமூர்த்தி அவர்களிடம் கொண்டு வந்து சேர்த்தார். தைலாம்பாள்.

அவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு “கோவை குப்புசாமி மருத்துவமனையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள். இங்கே அதற்கான சிகிச்சை வசதிகள் இல்லை” என்று கூறிவிட்டார்.

### கோவை மருத்துவமனையில்

3.3.1982 அன்று அவரைக் கோவை மருத்துவமனையில் இன்டென்சிவ் வார்டில் சேர்த்து ஐந்து நாட்கள் வைத்திருந்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு நார்மல் நிலைக்கு வந்த பிறகு அவரை வெளியே கொண்டு வந்து படுக்கையில் போட்டார்கள்.

### 9.4.1982 அன்று தைலாம்பாள் கண்ட கனவு

தைலாம்பாளும், அவர் கணவரும் தெய்வ பக்தி கொண்டவர்கள். அவர்களது மூதாதையரும் அப்படியே.. அம்மனை வேண்டியபடி அடிக்கடி விரதம் இருப்பவர் தைலாம்பாள். அந்த பக்தி சமயத்தில் வந்து கை கொடுத்தது.

அந்த சமயத்தில்தான் 9.4.1982 அன்று தைலாம்பாள் தூக்கத்தில் ஒரு கனவு. அருள்திரு அடிகளார் அவர்கள் வேப்பிலையேந்தி, செவ்வாடையணிந்தபடித் தோன்றி “மகளே! கவலைப்படாதே! நீ உன் கணவனை அழைத்துக்கொண்டு மேல்மருவத்தூர்க்கு வா! உனக்கு மாங்கல்யப் பிச்சை தருகிறேன். கலங்காதே” என்று சொல்லிவிட்டு மறைந்துவிடுகிறார்கள்.

உடனே சிவப்புச்சேலை அணிந்தபடி, பெரிய குங்குமப்பொட்டு வைத்த ஓர் அம்மையார் தைலாம்பாள் நெற்றியில் குங்குமம் வைத்து, கழுத்தில் மஞ்சள் கயிறு அணிவித்து, பூ, மஞ்சள் இவற்றை அவர் கையில் கொடுத்துவிட்டு, மேல்மருவத்தூர் சென்று வாம்மா... எனக்கூறிவிட்டு மறைகிறார்.

இந்தக் கனவு கண்ட மறுநாள் ஓர் ஆச்சரியம் கலந்த அற்புதநிகழ்ச்சி நடந்தது.. ஆம்!

### எதிர்பாராமல் வந்த மேல்மருவத்தூர் பிரசாதம்

மறுநாள் காலை கணவரது பக்கத்துப் படுக்கையில் இருந்த நோயாளி ஒருவரைப் பார்க்க வந்த அம்மையார் ஒருவர், தைலாம்பாளிடம் “இந்தாம்மா..! இது மேல்மருவத்தூர் அம்மன் குங்குமம்! இந்தா வைத்துக்கொள்” என்று சொல்லியபடி தைலாம்பாள் நெற்றியில் தானே குங்குமம் இட்டார்கள்.

(8ஆம் பக்க தொடர்ச்சி)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

தைலாம்பாளுக்கு ஒரே ஆச்சரியம்! அதுவரை அவருக்கு மேல்மருவத்தூர் பற்றித் தெரியாது. நோயாளியைப் பார்க்க வந்த அந்தப் பெண்மணி மூலமாகத்தான் மருவத்தூர் பற்றிக் கேட்டறிந்தார். கணவரோடு வந்து உன்னைச் சேவிக்க நீதான் அருள்புரிய வேண்டும் என்று அன்னையை வேண்டிக்கொண்டார்.

## தலைமை டாக்டர் சொன்னது

கோவை – குப்புசாமி மருத்துவமனை தலைமை டாக்டர் சொன்னார்.

“அம்மா! உங்கள் கணவரை இனி அழைத்துக்கொண்டு போகலாம். ஆனால் ஒன்று. இவர் ஒரு மண் பொம்மை, அப்படிப் பத்திரமாகப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு!

கவலைப்பட்டுப் பிரயோசனமில்லை. ஏதோ இது தெய்வத்தின் சித்தத்தால் உயிர் தப்பியுள்ளது. இவருடன் சேர்க்கப்பட்ட நான்கு பேர் முடிந்துவிட்டார்கள். உங்கள் கணவர் மட்டும் உயிர் தப்பியுள்ளார். உங்களின் தெய்வ பக்தியும் காரணமாக இருக்கலாம்.

மருத்துவ சிகிச்சைக் கட்டணத்திற்குரிய பில் கொடுப்பார்கள். செலுத்திவிட்டு 15 நாட்களுக்கொருமுறை வந்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்”என்று சொல்லியனுப்பினார்.

அழுதபடி நின்ற தைலாம்பாள், தெரிந்த ஒரு பெண்மணியின் துணையோடு வீட்டிலிருந்த நகைகளையெல்லாம் விற்று, கட்டணத் தொகையைச் செலுத்திவிட்டு கணவரை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

“இந்த நிலையில் இனிமேல் நீ ஜீப் ஓட்ட வேண்டாம்” என்று கலெக்டர் சொல்லிவிட்டார். எத்தனை நாள் விடுமுறை எடுத்தபடிக் காலம் தள்ளுவது? நம் வேலை என்னாகுமோ...? என்று கணவர் பயந்தபடி இருந்தார். மனைவி ஆறுதல் கூறித் தேற்றி வந்தார்.

## டாக்டர் சின்னச்சாமி கூறிய தகவல்கள்

அந்தச் சமயத்தில் டாக்டர் சின்னச்சாமி என்பவர் பழக்கமானவர், தைலாம்பாள் வீட்டிற்கு வந்தார்.

“மேல்மருவத்தூர் போய்வந்தேன். இந்தாருங்கள் பிரசாதம்! இவரை மேல்மருவத்தூர்க்கு அழைத்துச் சென்றால் குணமாகும். அங்கே எத்தனையோ பேர் தீராத வியாதிகள் எல்லாம் தீர்ந்திருக்கிறது. நீங்களும் ஒருமுறை போய் வாருங்கள்.

நீங்கள் இங்கே வீட்டில் லலிதா சகஸ்ரநாமம் படிக்கிறீர்கள். அங்கே தமிழ் மந்திரங்கள் படிக்கிறார்கள். பூசை முறைகளும் அர்ச்சனை முறைகளும் வித்தியாசமாக இருக்கின்றன. எல்லோரும் செவ்வாடை கட்டிக்கொண்டு வந்து கும்பிடுகிறார்கள்” என்றெல்லாம் சொல்லிப் புகழ்ந்தார் டாக்டர் சின்னசாமி.

கணவன், மனைவி இருவருக்கும் உடனே மேல்மருவத்தூர் புறப்பட வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ஆனால் பஸ் பயணத்தில் இவர் உடம்பு தாங்குமா? எனப்பயந்தார் தைலாம்பாள். கோடை விடுமுறை வந்தபிறகு போகலாம். அதற்குள் உடம்பும் சற்று தேறி வரட்டும் என்று எண்ணினார்.

## மருவத்தூர் வந்தது

கோடை விடுமுறை வந்தது. 2.5.1982 அன்று தைலாம்பாளும் கணவரும் புறப்பட்டு மேல்மருவத்தூர் வந்தடைந்தனர். அங்கு எல்லோரும் உருள்வலம் வந்தபடி இருந்தனர். நீங்களும் உருள்வலம் வாருங்கள்”என்று வேண்டினார் தைலாம்பாள். என் நிலைமையைத் தெரிந்தும் உருள்வலம் வரச் சொல்லுகிறாயே? எப்படி வருவேன்? என்றார் கணவர். அம்மா இருக்கும்போது பயம் எதற்கு? என்று வற்புறுத்தினார் மனைவி.

## ஒரு செவ்வாடைச் சிறுமி

விடிந்தால் சித்திரை பௌர்ணமி. அப்போது இரவு ஒரு மணி இருக்கும். அந்த வேளையில் எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி, கருவறையிலிருந்து வந்து, தைலாம்பாள் தலைக்கடியில் வைத்திருந்த பையை வெடுக்கென்று பறித்துக்கொண்டு ஓடிக் கருவறைக்குள் சென்று மறைந்துகொண்டாள்.

“ஐயோ! என் பையைக் கொடு!” என்று இவர் பின்தொடர்ந்து ஓடுவதற்குள் மறைந்துவிட்டாள் அந்தச்சிறுமி.

அம்மா! தாயே! நான் உருள்வலம் வருவதற்குச் சக்தியைக்கொடு! என்று கணவர் கருவறை எதிரே நின்றபடி அழுதார்.

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

அப்போது அதே செவ்வாடைச் சிறுமி ஓடிவந்து "இந்தா உன் பை! நீ உருள்வலம் செய்! பயப்படாதே"என்று கூறிவிட்டு மறைந்தாள்.

புதிய தெம்பு வந்தவராகக் கணவர் மனைவியிடம் பையைக் கொடுத்துவிட்டுக் குளித்து முடித்து வந்தார். ஆலயமே அதிரும்படி ஓம்சக்தி ஓம்சக்தி என்றபடி அன்னையின் மண்ணில் உருள்வலம் வந்தார்.

வந்ததும் வந்தாயிற்று. அம்மாவிடம் அருள்வாக்கு கேட்டுவிட்டுச் செல்வோம் என்று கருதினர்.

இவர்கள் பெயர்கள் அழைக்கப்பட்டன.

## அம்மா அருள்வாக்கில் சொல்லியவை

அன்னையின் முன்பு இருவரும் போய் வணங்கிவிட்டு அமர்ந்தனர்.

"வாடா மகனே வா! உட்காருடா! மறுபிறவி எடுத்து வந்திருக்கிறாயா? உனக்கு மறுபிறவி கொடுத்திருக்கிறேன் மகனே!"என்றதும் இருவரும் ஓ..வென்று அழத் தொடங்கிவிட்டனர். அழுது முடியட்டும் என்று காத்திருந்த அன்னை "அழுது முடித்துவிட்டாயா மகனே..?" என்று கேட்டாள்.

"அம்மா..!"என்றபடி கணவர் ஏதோ சொல்ல முற்பட்டார்.

"எல்லாம் எனக்குத் தெரியுமடா! நான்தான் கனவில் வந்து அழைத்தேன். என் மகள் மனமுருகி மாங்கல்யப் பிச்சைக்கு ஏங்கி அழுதாள். கேதார கௌரி விரதம் இருந்து கலசபூசை செய்த ஏழாண்டுப் புண்ணியப்பலன் இவளுக்கு உண்டு.

நான் சிவனுக்கே தாய்! நான் ஆதிபராசக்தி! இவள் ஈஸ்வர கேதார கௌரி விரதமிருந்ததால் உனக்கு உயிர்ப்பிச்சையும் மறுபிறவியும் அளித்திருக்கிறேன்"என்ற அன்னை, ஒரு கலசத்தை வாங்கிச் சென்று பூசை செய்து வா" என்று பணித்தாள்.

அடுத்த முறை அருள்வாக்கு கேட்க வந்தபோது...

"ஆன்மிகப் பணிகள் செய்து வா! வார வழிபாட்டு மன்றம் அமைத்து நீ தொண்டு செய்! அங்குள்ள மக்கள் வழிபாடு செய்வதற்கு நீ ஓர் ஊன்றுகோலாக இருக்க வேண்டும். காசு, பணம் பற்றிக் கவலைப்படாதே! அம்மா இருக்கிறேன். என் பணியை நீ செய்து வா! உன் பணியை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று தைலாம்பாளை நோக்கிக் கூறினாள் அன்னை.

## தூக்க முடியாத அட்டைப்படம்

ஒரு பெப்ரவரி மாதம் அன்னையிடம் அருள்வாக்கு கேட்கக் கணவன் மனைவி இருவரும் சென்றிருந்தனர். தங்களின் பணக்கஷ்டத்தை வாய் விட்டுச் சொல்ல முடியாத நிலை. எல்லாம் உணர்ந்த அன்னை "பணமில்லை என்று கவலைப்படாதே! இதோ!"என்று சொல்லி புற்றுமண்டபத்திலிருந்த அம்மன் படத்தை அங்கிருந்த தொண்டர் வீரராகவனிடம் சொல்லி எடுத்துக் கொடுத்தாள்.

அந்தப்படம் அட்டையில் வரைந்த படம்தானே..? போட்டோ படமில்லையே.. என்று தைலாம்பாள் ஏங்கினார். அந்த நினைப்புக்கு வெட்கப்படும்படியாக அன்னை அப்போது ஒரு சித்தாடல் புரிந்தாள். ஆம்! வெறும் அட்டைப்படமாக இருக்கிறதே என்றெண்ணினார் அல்லவா? அதை அவராலும், அவர் கணவராலும் தூக்கிச் செல்ல முடியாத அளவு அவ்வளவு கனமாக இருந்தது. அழுதுவிட்டார்கள்.

அன்னை சொல்லியது
"இரவு 12 மணிக்கு இப்படத்தை வைத்துப் பூசை செய்! அப்போது சில நிகழ்ச்சிகள் நடக்கும். அவற்றை யாரிடமும் சொல்லாதே...!" என்றாள் அன்னை.

அவ்வாறே எடுத்துச் சென்று இரவு 12.00 மணிக்குப் பூசை செய்தார் தைலாம்பாள். அப்போது அன்னையின் சிரசின் பின்புறத்தில சக்கரம் ஒன்று ஒளி வீசியபடிச் சுழன்றது. அதுகண்டு மெய்சிலிர்த்தார்.

அதுமட்டுமல்ல.. அருள்திரு அடிகளார் அவர்களின் தலையின் பின்புறமும் அந்தச் சக்கரம் ஒளியுடன் சுழன்றதைத் தைலாம்பாளும், அவர் கணவரும் கண்டனர். அடுத்து சூலத்திலிருந்தும் ஓர் ஒளியைக் காட்டினாள் அன்னை.
உடனே இருவரும் பரவசப்பட்டு, ஆனந்தக்கண்ணீர் மல்க, 'ஓம் சக்தி ஓம் சக்தி அம்மா! உன் திருவிளையாடலே திருவிளையாடல்! என்று சொல்லி அழுதனர்.

(தொடர்ச்சி...10ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – December 2016

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 18.12.2016 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

அந்தப் படத்தைத்தான் இன்று பள்ளிப்பாளையம் பொதுமன்றத்தில் வைத்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

அடுத்து ஒரு வெள்ளிக்கிழமை பூசை செய்த அன்று அன்னைக்கு அணிவித்த மலர் மாலை வளர்ந்தது. அன்னையின் கட்டளைப்படி நடந்த அற்புதங்களை யாரிடமும் கூறவில்லை.

வாரவழிபாட்டு மன்றம் தொடங்கப்பட்ட பிறகு..

அன்னையின் அருளாணைப்படி பள்ளிப்பாளையத்தில் வார வழிபாட்டு மன்றம் 1983 மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. தைலாம்பாள் மீண்டும் அன்னையிடம் அருள்வாக்கு கேட்கச் சென்றார்.

"மகளே! முழுப்பொறுப்பேற்றுக்கொண்டு அம்மாவுக்குத் தொண்டு செய்கிறாய். உன் குடும்பத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நம்பிக்கையற்ற மூடர்களுக்கு விளக்கம் தரப்போகிறேன்.

1008 போற்றி மலரில் 306ஆவது மந்திரம் படிக்கும்போது அம்மாவிடமிருந்து பூ விழும்., அப்போது நீ நன்றாகக் கவனி. பிறகு அங்கு நடக்கும் அதிசயம் ஊரை வியக்கச் செய்யும். நீ கவலைப்படாதே! இன்னும் என்ன வேண்டும் கேள்!"என்றாள் அன்னை.

"அம்மா! உன் அருள் எனக்கு எப்போதும் வேண்டும்"எனக்கேட்டு ஆசி பெற்று வெளிவந்தார் தைலாம்பாள்.

### ஊரே வியந்த அதிசயம்

1983 ஜூன் மாதம் அன்னையின் திருவுருவப்படத்திற்கு அணிவிக்கப்பட்ட மல்லிகைச்சரம் மாலைகள் எல்லாமே வளர்ந்து நீண்டு அந்தக் கோவிலின் பாதி இடம் வரை அடைத்துக் கொண்டது.

அன்று புதன்கிழமை சந்தை நாள்! மக்கள் திரள் திரளாக வந்து அந்த அதிசயத்தைப் பார்த்து அன்னையைத் தரிசித்துவிட்டுச் சென்றார்கள்.

மன்றங்களில் மாலை வளரும் அற்புதம் இன்று சகஜமாகிவிட்டது. ஆயினும், இத்தகைய மாலை வளரும் அற்புதம் முதன் முதல் பள்ளிப்பாளையம் பொதுமன்றத்தில்தான் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

"விழாக்களைக் கொண்டாடுவதன் மூலந்தான் பக்தர்களும் அன்பும், பக்தியும் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது".

-அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – December 2016



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 02.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.12.2016 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 16.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.12.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 10.10.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.10.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

ஒரு மனிதனைத் ‘தான்’ என்ற கர்வமும், அகந்தையும் எப்பொழுது ஆட்டிகொள்கிறது? அது நம்மை ஆட்கொள்ளாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் அம்மா?

மனிதனுக்குத் தன்னிடம் உள்ள தனித்தன்மையையும், திறமையையும் நினைத்துப் பார்த்துப் பெருமை கொள்ளும் போதுதான் **தான்** என்ற கர்வமும் அகந்தையும் ஏற்படுகிறது. விட்டுக் கொடுத்து வாழாத பிடிவாத குணமும் கர்வத்திற்குக் காரணம் ஆகும். அது நம்மை ஆட்கொள்ளாமல் இருக்க, தற்பெருமை கொள்ளக்கூடாது. அடக்கமும் பொறுமையும் வேண்டும். தன்னைவிடத் தாழ்ந்தவர்களுடன் தன்னை ஒப்பிட்டுக்கொள்ளாமல், தன்னைவிட உயர்ந்தவர்களுடன் ஒப்பிட்டுக்கொண்டு மேலும் உயர முயற்சிக்க வேண்டும். அதே நேரம் நம்மிடம் பொறாமை உணர்வும் பேராசையும் ஏற்பட்டுவிடாமல் கட்டுப்படுத்த வேண்டும். அம்மா அருள்வாக்கில் கூறுவது போல **தான்** என்ற எண்ணம், நாம் என்ற எண்ணமாக மாற வேண்டும்.

# Divine Miracles at Melmaruvathur

## If there is Birth, there will be Death:

Two brothers had involved themselves in Mother's service since 1972. They were Onampakkam Ayyaswamy and Subbarayan. Ayyaswami was appointed as the propaganda chief for the southern wing. Subbarayan was in charge of the Yagnas. Their families were severely tested. Mother's grace and her blessings, however, saved their family. Sakthi Ayyaswamy became old and whenever he went through dangerous phases Mother saved him and his life was extended.

If there is birth, there will be death. In 1996 he fell ill and the doctors suspected it to be early stages of cancer. Subbarayan decided not to inform his brother's family about this because they may find it too difficult to accept. In spite of medication the disease spread. On 3rd March Ayyaswamy wanted to go to Maruvathur as it was Adigala's birthday. After the usual ceremonial rites were performed his brother Aubbarayan was told to keep his brother at home and give him rest. He was also told that each living day was a bonus for his brother.

The 108, 1008 mantras were chanted before him and he would sleep off and thus escape the pain of the disease. When the severity of his disease increased on 20.03.1996 he very much wanted to see Mother. Adigalar however suggested that as the man was not strong enough to move about, a temple like atmosphere had to be created at home itself and satisfy him. He was losing consciousness often and his mind, when he was conscious, was filled with thoughts of Mother and his service activities.

On 23.03.1996 while the ceremonies were being conducted and the songs were being sung, the man died peacefully. Even though it was difficult for the family to accept his death, in view of the other devotees who had come there, his death at that point was an excellent release. God's servants usually pray that they should not forget God's name at the moment of death and pain. They pray for peaceful release and union with God. The true devotees of God are free from fear of death and the attendant frightening experiences unlike the ordinary men. Death, which occurred while the atmosphere was charged with devotion, prayer and service, is excellent.

Subbarayan completed the last rites of his brother and visited Mother. Her words of wisdom were meant not only to Subbarayan but they have a message for each and everyone. She said, "Son, if there is birth there will be death. Do not worry about your brother's death. Each man's death depends upon his actions. You and your brother did service without expecting any results and accordingly your brother's death was a peaceful and soothing experience for him. Money does not save people from sudden and strange ends. Sometimes death occurs in places far away from home, during accidents and mishaps." Ayyaswamy and Subbarayan belonged to a respectable family and because his parents and ancestors had acquired merit through self-less actions, their family was saved by Mother.

However Karma plays its role and suffering is inevitable. Organic material perishes if it is not used, but even after perishing it has the potential for sprouting and starting a new life. Similarly the good actions of an individual are capable of saving his family and heirs. Man's needs and desires keep on increasing, Only when man's mind is diverted towards service does his desire decrease and helps him to get peace. In the state of excessive desire and selfishness there can be no peace at all. Service is the only act, which is capable of giving peace and satisfaction.

# அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**கார்த்திகை –அமாவாசை–பௌர்ணமி:**

நற்கதி உண்டாகும், மன நிம்மதி கிடைக்கும்.

**மார்கழி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆரோக்கிய வாழ்வு உண்டாகும்.

எவ்விதத்திலும் பாதிக்கப்படாத நிலையும், நல்ல ஆரோக்கியமும் உண்டாகும்.

# அன்னையின் அருள்வாக்கு

## அவரவர்கள் வினைகள் வெவ்வேறு

“ஒன்பது முறை இருமுடி செலுத்திவிட்டால் உன் குறைகளெல்லாம் தீர்ந்துவிடும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. சிலருக்கு ஐந்தாவது இருமுடி அணிந்தாலே வினை தீரும். சிலருக்கு 10, 11 என்று அணிந்தாலும் வினைகள் தீர்வதில்லை.”

## இருமுடியும் - பலனும்

“இருமுடி செலுத்தியதும் பலனை உடனே எதிர்பார்க்காதே! ஒரு செடியை ஊன்றி நட்டபின் அது வேர்ப்பிடித்துத் தளிர்விட்டுப் பூத்துப் பின் காய்த்து அதன் பிறகே கனி வரும். அதுபோல் உன் ஒவ்வொரு இருமுடிக்கும் கட்டாயம் பலன் உண்டு”.

## இடையில் நிறுத்திக்கொள்ளாதே!

“இருமுடி அணிவதால் துன்பத்திலிருந்து நம்மை அம்மா காப்பாற்றுகிறாள், பாதுகாக்கிறாள் என்பதைத் தற்போது உணர்கிறீர்கள். செலுத்த வேண்டிய இருமுடியைச் செலுத்தி முடித்துவிட்டோம் என்று நினைத்து நிறுத்திக் கொள்ளாதே! அவ்வாறு நினைத்தால் எல்லாம் முடிந்துவிடும். இருமுடியை விட்டுப்பார்! என்ன நடக்கிறதென்று தெரியும். ஒருசமயம் மகிழ்ச்சியாக இருக்கும், ஆனால் போகப்போக இரண்டு மடங்கு கஷ்டங்கள்தான் வரும்”.


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

தனி இதழ்

ரூபா ₹ 15.00

ஆண்டுச்சந்தா

ரூபா ₹ 180.00 (இந்தியா)

ஆயள் சந்தா

ரூபா ₹ 2600.00 (இந்தியா)

வெளிநாட்டுச் சந்தா

**இந்திய ரூபா ₹ 3500.00**
**(இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address:
Editor, ‘Sakthi Oli’ Office,
Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,
Tamil Nadu, South India.

**சக்தி ஒளி சந்தாதாரர்களுக்கு!**

சந்தா புதுப்பித்தல் மற்றும் விலாச மாற்றத்திற்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்குக் கடிதம் மூலம் அல்லது 044-27529900 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ள முடியும்.

நேரடியாக இணையத்தளத்தினூடாகவும் ஆன்லைனில் புதுப்பித்தல், புதிய சந்தாக்களை மற்றும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

**www.sakthioli.com**

# சஞ்சலம் போக்கிய சக்தி மாலை

- திருமதி கே.எஸ்ஜி.சிவஜோதி – காரைக்கால்

ஓம் சக்தி அம்மாவின் பாத கமலங்களுக்குச் சமர்ப்பணம்! நான் அம்மாவின் திருவிளையாடல்களையும் அவள் கடாட்சத்தையும் பூரணமாக அனுபவித்து அவளே துணை என வாழ்ந்து வருபவள்.

என் வாழ்வில் நடந்த அனுபவங்களில் ஒன்றை மட்டும் சக்தி ஒளி வாசகர்களுக்கு எழுத விரும்புகிறேன். நான் பெண்ணாகப் பிறந்து பல துன்பங்களை அனுபவித்து விட்டேன். எல்லாவற்றிற்கும் மேலாக என் கணவரையே இழந்து நான்கு பிள்ளைகளுடன் இருளில் வழி தெரியாது மயங்கி நின்ற வேளையில், என் இல்லத்தின் எதிரே ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் தொடங்கினார்கள். அன்று அன்னையின் படத்தை யானை மேல் வைத்து ஊர்வலம் வந்தார்கள்.

கணவரை இழந்து 10 வருடங்களுக்குப் பிறகு அன்றுதான் ஆதிபராசக்தியைக் கும்பிடச் சென்றேன். என் மனச்சுமைகளை அவள் காலடியில் இறக்கி வைத்தேன். மன்ற உறுப்பினராகச் சேர்ந்து வார வழிபாடுகளில் கலந்துகொண்டேன். அசையாத நம்பிக்கை வைத்து அன்னைக்குத் தொண்டு செய்தேன். நான் அடிக்கடி உடல்நலம் குன்றி அவதிப்பட்டு வந்தேன். என் இளைய மகன் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வந்தான். மாதாமாதம் அங்கே சென்று வருவேன்.

ஒரு முறை பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெறச் சென்றேன். என் மகன் துணையுடன் மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெறச் சென்றேன். அவர் பரிசோதனை பல செய்து சோதனைகளின் முடிவைப் பின்னர் அறிவிப்பதாகக் கூறிவிட்டார்.

சில நாட்கள் கழித்து என் மகன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். “நீ உடனே புறப்பட்டு வா1 உனக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து கர்ப்பப்பையை எடுக்க வேண்டுமாம். அவ்வாறு அகற்றிவிட்டால் மீண்டும் பிரச்சனை இருக்காது. திகதி குறித்து கொடுத்து விட்டார்கள். நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கிறேன். உடனே புறப்பட்டு வா!” என்று என் மகன் எழுதியிருந்தான்.

அப்பொழுது தை மாதம். மன்றத்தார் எல்லோரும் சக்திமாலை அணிந்துகொண்டு விரதமிருந்து இருமுடி ஏந்தி மேல்மருவத்தூர் போக இருப்பதாகக் கூறினார்கள். நிறைய பெண்கள் போவதாகக் கூறினார்கள். அப்படியானால் நானும் இருமுடி எடுக்கிறேன். விரதம் இரக்கிறேன். என் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்! என்று கூறி சக்தி மாலை போட்டுக்கொண்டேன். என் மகன் அப்போது ஜிப்மர் மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

“நான் இருமுடி செலுத்த மாலையைப் போட்டுக் கொண்டேன். எனவே அறுவை சிகிச்சையைத் தள்ளி வைக்க ஏற்பாடு செய்!” என்று கடிதம் போட்டேன்.

மருவத்தூர் சென்று இருமுடி செலுத்தி அன்னைக்கு அபிடேகம் செய்து என் உடல் நோயைப் போக்க வேண்டி முறையிட்டேன். இருமுடி செலுத்திவிட்டு வந்த அன்று ஏதோ என் மனதிலும் உடலிலும் புதிய தெம்பும் சக்தியும் முதன் முதலாகத் தோன்றியது. நம்பிக்கையுடன் ஊர் திரும்பினேன்.

அடுத்த மாதம் உடல் கோளாறு நீங்கிவிட்டது. உடனே என் மகனுக்கு உடல்நிலை சரியாகிவிட்டது. இனி அறுவை சிகிச்சை வேண்டாம் எனக் கடிதம் எழுதினேன். என் வீட்டிலிருந்த அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

அதன் பிறகு அம்மா படத்தை வாங்கி வீட்டில் வைத்து வழிபாடு செய்து வந்தேன். அடிக்கடி அன்னை என் கனவில் ஒளியாகத் தோன்றி அறுதல் அளித்து வந்தாள்.

என் வாழ்விலும் பக்கத்துணையாக இருந்து என் கடமைகளை நிறைவேற்றி வைத்தாள். பிள்ளைகளுக்குத் திருமணம் நடந்தது. பேரன் பேத்திகள் பிறந்தார்கள்.

14 முறை சக்தி மாலை அணிந்து இருமுடி செலுத்தி விட்டேன். 15ஆவது மாலை செலுத்தியதும் அடிகளார் ஆசி பெற்றேன். சென்னையில் இருக்கும் என் மூன்றாவது மகன் மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்து அடிபட்டும் உயிர் தப்பியதற்கு அம்மாவின் அருளே காரணம்! அம்மாவிடம் வந்ததிலிருந்து இருமுடி விரதத்தை நான் விட்டதில்லை. அம்மாவும் எங்கள் குடும்பத்தைக் கைவிட்டதில்லை.

அம்மாவின் அருளால்தான் நான் இன்றுவரை வாழ்கிறேன். எனக்கும் என் குடும்பத்திற்கும் கண்ணின் மணியாய், காக்கும் தெய்வமாய் இருந்து காத்து வருகிறாள்.

குருவடி சரணம், திருவடி சரணம்.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2016 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| கார்த்திகை | 28 | 13.12.2016 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2016 | ஞாயிறு | **கிறிஸ்மஸ்** |
| மார்கழி | 13 | 28.12.2016 | புதன் | **அமாவாசை - வேள்வி** |

### 2017 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 17 | 01.01.2017 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 28 | 12.01.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| தை | 01 | 14.01.2017 | சனி | தைப்பொங்கல் |
| தை | 14 | 27.01.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| தை | 27 | 09.02.2017 | வியாழன் | **சித்தர்பீடத்தில் தைப்பூச ஜோதிப் பெருவிழா** |
| மாசி | 14 | 26.02.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மாசி | 19 | 03.03.2017 | வெள்ளி |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 76ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 28 | 12.03.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| பங்குனி | 14 | 27.03.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| பங்குனி | 16 | 29.03.2017 | புதன் | **தெலுங்கு வருடப்பிறப்பு** |
| பங்குனி | 28 | 10.04.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2017 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 13 | 26.04.2017 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | **சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா** |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

### திசை திருப்பவே இருமுடி

"திசை தெரியாமல் அலையும் இன்றைய மக்களைத் திசை திருப்பவே இருமுடி செலுத்த வைக்கின்றேன். ஒருமுறை இருமுடி செலுத்தினாலாவது திருந்துவானா என்று பார்க்கிறேன்".

\- அன்னையின் அருள்வாக்கு

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 03.12.2016 | சனி | கார்த்திகை | 18 | சதுர்த்தி விரதம் |
| 05.12.2016 | திங்கள் | கார்த்திகை | 20 | ஷஷ்டி விரதம் |
| 10.12.2016 | சனி | கார்த்திகை | 25 | ஏகாதசி விரதம் |
| 12.12.2016 | திங்கள் | கார்த்திகை | 27 | பிரதோஷ விரதம் - குமாராலய தீபம்<br>திருக்கார்த்திகை விரதம் |
| 13.12.2016 | செவ்வாய் | கார்த்திகை | 28 | **சர்வாலய தீபம்**<br>**பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.12.2016 | புதன் | கார்த்திகை | 29 | விநாயக விரதாரம்பம் **-பிள்ளையார் கதை விசேட பூசை ஆரம்பம்**<br>ஸ்ரீ சிவா - ஸ்ரீ விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ்-மெல்போர்ண் |
| 17.12.2016 | சனி | மார்கழி | 02 | சங்கட சதுர்த்தி |
| 18.12.2016 | ஞாயிறு | மார்கழி | 03 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 25.12.2016 | ஞாயிறு | மார்கழி | 10 | ஏகாதசி விரதம் |
| 26.12.2016 | திங்கள் | மார்கழி | 11 | பிரதோஷவிரதம் |
| 28.12.2016 | புதன் | மார்கழி | 13 | அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர் |
| 29.12.2016 | வியாழன் | மார்கழி | 14 | அமாவாசை விரதம் - ஹனுமார் ஜெயந்தி |

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2017 | ஞாயிறு | மார்கழி | 17 | ஆங்கிலப் புத்தாண்டு |
| 12.01.2017 | வியாழன் | மார்கழி | 28 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.01.2017 | சனி | தை | 01 | **தைப்பொங்கல்** |
| 15.01.2017 | ஞாயிறு | தை | 02 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 27.01.2017 | வெள்ளி | தை | 14 | அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர் |
| 09.02.2017 | வியாழன் | தை | 27 | தைப்பூச பெருவிழா – தைப்பூச ஜோதி ஏற்றல் - மே.மருவூர் |

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும்**
**அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**